# ரூத் சரித்திரத்தில் நகோமியின் பங்கு

***ஜெ. ஸ்டெல்லா ஏஞ்சல்,*** **B.E.,**
சாயர்புரம்

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6391

## நகோமியின் குடும்பம்

நகோமி என்பவள் தன் கணவன் எலிமெலேக்கு மற்றும் அவர்களது குமாரர் மக்லோன் மற்றும் கிலியோனோடு பெத்லகேமில் வாழ்ந்து வந்தனர்.

பெத்லகேம் என்றால் அப்பத்தின் வீடு என்று அர்த்தம். ஆனால் அந்த அப்பத்தின் வீடே பஞ்சத்தின் வீடாக மாறியது. இப்படி பஞ்சத்தினால் எலிமெலேக்கு தன் மனைவி பிள்ளைகளோடு தேவனின் சித்தத்தை அறியாமல், அவரிடம் எதுவும் கேட்காமல், ஜெபிக்காமல் சாபத்தின் நாடாகிய விக்கிரகங்கள் நிறைந்த மோவாப் தேசத்திற்குச் சென்று குடியேறினர். நகோமியும் இதற்கு மறுப்பு தெரிவித்ததாக வேதாகமம் கூறவில்லை.

யார் இந்த நகோமி, அவர்கள் சென்ற மோவாப் பட்டணம் அவர்களுக்கு காலப்போக்கில் என்னென்ன துயத்தைக் கொடுத்தது? நகோமி செய்த தவறு என்ன? இவள் வாழ்க்கையில் நடந்த துயரமான சம்பவங்கள் என்னென்ன? இவள் எடுத்த முடிவு என்ன? தேவன் ஏன் இவளை அசீர்வதிக்க விரும்பினார்? எப்படி ஆசீர்வதித்தார்? மாமியார்களுக்கு எல்லாம் சிறந்த ஒரு முன்னுதாரனமாக விளங்கும் இந்த நகோமியின் வாழ்க்கையில் இருந்து நாம் என்ன கற்றுக் கொள்ளலாம் என்பதைப் பற்றி விரிவாக பார்ப்போம்.

## தேவன் வெறுக்கும் விக்கிரக ஆராதனை

நகோமி என்றால் மதுரம் மற்றும் இனிமை என்று அர்த்தம். அப்பத்தின் வீடு என்று அழைக்கப்பட்ட பெத்லகேமில் வாழ்வதை அவள் மதுரமாக எண்ணாமல் அந்நிய தேசமாகிய மோவாபிற்குச் சென்றதால் அவளது வாழ்க்கை அங்கு கசப்பாக மாறியது. அங்கு போய் குடியேறின பின்பு எலிமெலேக்கு மரித்தான். நகோமி விதவையாக மாறினாள்.

உ.பா 7:3ல் சொல்லியிருக்கின்ற தேவனுடைய கட்டளையை மீறி அந்நிய பெண்களை விக்கிரக ஆராதனை செய்யும் மோவாபிய பெண்களை தன் இரண்டு குமாரர்களுக்கும் திருமணம் செய்து வைத்தாள். நகோமியின் குடும்பம் ஏறக்குறைய பத்து வருஷம் அங்கே வாசம் பண்ணியது. கணவனை இழந்த நகோமி தன் கணவனின் மறைவிற்குப் பின்பு தன் இரண்டு குமாரர்களையும் பறி கொடுத்தாள்.

அவளது இரண்டு மகன்களும் மரித்துப் போனார்கள். நகோமிக்கு யாருமே இல்லை. தனித்தவளாக மாறினாள். மோவாபிய பெண்களாகிய நகோமியின் மருமகள்கள் ஓர்பாளும், ரூத்தும் கூட இள வயதிலேயே விதவைகளாக மாறினர்.

மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு அதின் முடிவோ மரண வழிகள். நீதி-*14:12*

பெத்லகேமின் வறுமைக்குத் தப்பி மோவாபின் மரணபிடியில் பரிதாபமான நிலையில் நகோமி இருந்தாள். இங்கு சென்றால் நாம் பிழைத்துக் கொள்ளலாம், சிறப்பாக வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம் என்கிற கனவோடு மோவாபிற்குச் சென்ற அவளுக்கு, அங்கு சொந்தமாகக் கிடைத்தது மூன்று கல்லறைகள் மட்டுமே.

**தேவ சித்தத்தை அறிதல்**

கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து, அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று அவள் மோவாப் தேசத்திலே கேள்விப்பட்டு, தன் மருமக்களோடே கூட மோவாப் தேசத்திலிருந்து திரும்பி வரும்படி எழுந்து, ரூத்-*1:6* என்கிற செய்தி நகோமியின் காதில் விழுந்தது. இதை விசுவாசித்த அவள் உடனடியாக மோவாபை விட்டுவிட்டு தனது தாய்நாட்டிற்கு திரும்ப சென்றுவிடலாம் என்று முடிவு பண்ணினாள். நகோமி மோவாபிற்கு போனது தேவ சித்தம் அல்ல, அது பின்வாங்கிப் போன வாழ்விற்குச் சமம், அவள் தவறு செய்தது உண்மை தான் ஆனால் கர்த்தரின் சத்தத்தைக் கேட்டதும், கேள்விப்பட்டதும் தன் மனதில் உணர்த்தப்பட்டு விக்கிரகங்கள் நிறைந்த, பாவம் நிறைந்த மோவாபை விட்டுவிட்டு தன் சொந்த தேசத்திற்கே போகவும், அங்கு சென்று தேவனைத் தேடவும் தீர்மானித்தாள் அல்லவா, தீர்மானித்தது மட்டுமல்லாமல் உடனே புறப்பட ஆரம்பித்தாள். கர்த்தரை அடைக்கலமாகக் கொண்டு ஆசீர்வாதத்தை சுதந்திரத்துக் கொள்ள முடிவு செய்தாள்.

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். நீதி-*28:13*

மனிதர்கள் தவறு செய்வது இயல்புதான், ஆனால் தவறு என்று தெரிந்த பின்பு அதை திருத்திக் கொள்வதுதான் புத்திசாலித்தனம். நாமும் கூட கர்த்தரையும், அவருடைய மகத்துவத்தையும், வல்லமையையும் குறித்துக் கேள்விப்பட்டும், பழைய பாவ வாழ்க்கையை விட்டு, பாவத்தை விட்டு எழும்பாமல், பாவத்தை உதறித் தள்ளாமல் அதையே செய்து கொண்டிருக்கிறோமா? நம் வாழ்வில் காணப்படும் ஆண்டவருக்கு பிரியமில்லாத பாவங்களை அவரிடம் அறிக்கையிட்டு மனம் திரும்பி நல்வாழ்க்கையையும், ஆசீர்வாதத்தையும் பெற வேண்டும்.

**நகோமியின் சுயநலமற்றதன்மை**

நகோமி இப்படி முடிவெடுத்து தன் மருமகள்களோடு பெத்லகேம் போய் கொண்டிருக்கும் போது தனது மருமகள்களைப் பார்த்து அவர்களது தாய்வீட்டிற்கே அவர்கள் திரும்பி போகும்படி அவர்களை வற்புறுத்தினார். இவர்கள் போய் விட்டாள், அவள் தனிமையாகி விடுவாள் என்று அவள் நினைக்கவில்லை. இப்படி அவர்கள் இவளோடிருந்தால் அவர்கள் மறுமணம் செய்து கொள்ளவும், சந்தோஷத்தை அனுபவிக்கவும் வாய்ப்பிருக்காது என்கின்ற நல்ல எண்ணத்தோடு அப்படிச் சொன்னாள். அவர்கள் தனக்கு உதவி செய்ய வர வேண்டும், பணிவிடை செய்ய அவர்கள் இருக்க வேண்டும் என்று சுயநலமாக நினைக்கவில்லை. தன்னுடைய சொந்த மகள்களைப் போல தனது மருமகள்களை அன்போடு நடத்தினாள். நீங்கள் மரித்துப் போன என் குமாரருக்கும், எனக்கும் தயை செய்தது போல கர்த்தர் உங்களுக்கும் தயை செய்வாராக என்று அவர்களைப் பார்த்து ஆறுதலாகப் பேசி, வாய்க்கும்

புருஷனுடைய வீட்டில் கர்த்தர் உங்களைச் சுகமாக வாழ்ந்திருக்கச் செய்வாராக என்று அவர்களை வாழ்த்தி ஆசீர்வதித்து அனுப்புகின்றாள்.

மாமியார்களாக இருக்கின்ற ஒவ்வொருவரும் தங்களது மருமக்களை இப்படி நகோமியைப் போல ஆசீர்வதித்து பேச வேண்டு. மாமியார்கள் மருமகளிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும், இப்படி மாமியார்கள் மருமகளிடம் அன்பு காட்டும் போது மருமகள்கள் மாமியாருக்கு அதைவிட அன்பு காட்ட ஆரம்பிப்பார்கள். தனது மாமியாரின் வாழ்க்கையைக் கண்ட ரூத், மாமியாரை சார்ந்த இஸ்ரவேலர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றும், மோவாபிய ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள் என்றும் புரிந்து கொண்டாள். ரூத், மாமியாரின் வேண்டுகோளுக்கு மறுப்பு தெரிவித்தாள். விதவையான மாமி தனக்கு எந்தவித ஆறுதலையும் பாதுகாப்பையும் தர முடியாது என்று அறிந்திருந்தும் ரூத் நகோமியை விடாமல் பற்றிக் கொண்டாள். ரூத் தனது தீர்மானத்தில் உறுதியாக இருந்ததினால் நகோமியால் எதிர்த்து ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஆனால் மற்றொரு மருமகளான ஓர்பாளோ மாமியை முத்தமிட்டுவிட்டு திரும்பிப் போய்விட்டாள்.

பெத்லகேமிலே ஆச்சரியத்தோடு, இவள் நகோமியா என்று பேசிக் கொண்ட ஊராரைப் பார்த்து நகோமி, தன்னை “நகோமி என்று சொல்லாமல் மாராள் என்று சொல்லுங்கள். சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார். நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்.. கர்த்தர் என்னைச் சிறுமைப்படுத்தி, சர்வவல்லவர் என்னைக் கிலேசப்படுத்தியிருக்கையில், நீங்கள் என்னை நகோமி என்பானேன் என்றாள்”. *ரூத்-1:20, 21*

அவர்களுடைய சுயவிருப்பத்தின்படி அவர்கள் எடுத்த தவறான முடிவு தான் அவள் அனுபவித்த கஷ்டங்களுக்குக் காரணம் என்று அவள் உணராமல், நகோமி கர்த்தர் மீதே பழியை சுமத்துகின்றாள். இது நகோமி செய்த மிகப் பெரிய தவறு. நாமும் கூட தேவசித்தத்தை அறியாமல் நம்முடைய மனவிருப்பத்தின்படி ஏதாவது ஒரு காரியத்தை செய்து விட்டு, தவறு நடந்த பின்பு, பிரச்சனை வந்த பின்பு, பிரச்சனையில் அகப்பட்ட பின்பு கர்த்தரைப் பார்த்து, என்ன கர்த்தரே எனக்கு இப்படி செஞ்சிட்டீங்க என்று குறை கூறுகின்றோமா, அப்படி செய்யக் கூடாது. எப்போதுமே ஒரு காரியத்தை முடிவெடுக்கும் முன்பு நன்றாக ஜெபித்து, தேவ சித்தத்தை அறிந்து நாம் செயல்பட வேண்டும்.

## பெத்தலகேமுக்கு திரும்புதல்

பெத்லகேமிற்கு ரூத்தும், நகோமியும் திரும்பி வந்த காலம் வாற்கோதுமை அறுப்பின் துவக்ககாலமாக இருந்தது. தன் மாமியாரின் அனுமதியோடு, ரூத் அங்கு வயல் வெளிகளில் சிந்திய கதிர்களை பொறுக்கினாள். தற்செயலாக அவளுக்கு நேரிட்ட அந்த வயல்நிலம் எலிமெலேக்கின் வம்சத்தானாகிய போவாசுடைய நிலமாக இருந்தது. நகோமி பாருங்க, மருமகளுக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்படி தீர்மானம் எடுத்த நகோமி, போவாசை சந்திக்கும் முறையை ஆலோசனையாகக் கூறினாள். இப்படி ரூத் திருமணமாகி போய்விட்டால் தான் தனிமையாக இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுமே என்று நகோமி நினைக்கவில்லை. அவள் ஒரு விதவையாக இருந்தாலும் கூட தனது மருமகளும் தன்னைப் போல விதவையாகவே இருந்து என்றென்றும் அவள் காலத்தைக் கழிக்க வேண்டும் என்று அவள் விரும்பவில்லை. இப்படி தன் மருமகளுக்கு நல்வாழ்க்கையை கொடுக்கத் திட்டமிட்ட நகோமிக்கு, கர்த்தர் நல்வாழ்வைக் கொடுத்து ஆசீர்வதிக்கின்றார்.

**ஒருமனம்**

நீங்கள் கூட உங்கள் பிள்ளைகள், மருமக்களின் நல்வாழ்விற்கு அவர்களை வழிநடத்த வேண்டும். ரூத்தும் தன் மாமியாரோடு இசைந்து போனாள். எந்தவித முறுமுறுப்பும் ரூத்திடம் காணப்படவில்லை. தன் மாமியாரை மிகவும் மதித்தாள், தன் மாமியாரை மிகவும் நேசித்தாள். மாமியார் சொல்லும் ஆலோசனைகளை அவள் அப்படியே செய்தாள். போவாசும் ரூத்தை திருமணம் செய்து கொண்டான். கர்த்தர் ரூத்தின்திருமணவாழ்க்கையை ஆசீர்வதித்து அவளுக்கு ஒரு குமாரனைக் கொடுத்தார். அவனுக்கு ஓபேத் என்று பெயரிட்டனர். நகோமி பாருங்க, இப்படி பெயர் வைக்கும் காரியத்தில் அவர்கள் எடுத்த தீர்மானத்தில் அவள் குறுக்கிடவில்லை.

பிள்ளை பிறந்திருக்கும் போது, நகோமி, எருசலேம் குமாரத்திகள் அவளை வாழ்த்தும் பாக்கியத்தைப் பெற்றாள். அவள் நிமித்தம் கர்த்தரை அவர்கள் ஸ்தோத்தரித்தனர். நகோமி தன் பேரக் குழந்தைகளை எடுத்து, தன் மடியிலே வைத்து, அதை வளர்க்கின்ற தாயாகவும் மாறினாள் என்று நாம் வேதாகமத்தில் பார்க்கின்றோம். இப்படி நகோமியை உயர்த்திய ஆண்டவர், ஆசீர்வதித்த ஆண்டவர் இன்றைக்கு நம்முடைய ஆண்டவராக நம்முடனே கூட இருக்கின்றார். பின் வாங்கிப் போன நகோமி மீண்டும் அவரிடம் வந்த போது அவளை சேர்த்துக் கொண்டு அவளை ஆசீர்வதித்த தேவன், நாம் பின்மாற்ற நிலையில் இருந்து மனந்திரும்பி வரும் போது நம்மையும் சேர்த்துக்கொண்டு நம்மை ஆசீர்வதிக்கின்றவராக இருக்கின்றார்.

விதவைகளை விசாரிக்கின்ற தேவன், நகோமியையும், ரூத்தையும் கைவிடாமல் தாங்கினது போல, ஒருவேளை நீங்கள் கூட விதவையாக இருந்தால் உங்களைக் கைவிடாமல் அவர் ஏந்தித் தாங்குவார். நகோமியின் கசந்த வாழ்க்கையை மதுரமாக மாற்றிய தேவன் உங்களுடைய கசந்த வாழ்வையும் மதுரமாக மாற்றுவார். நகோமி ஒரு நல்ல மாமியாராக, நல்ல ஒரு தாயாக விளங்கினாள். மருமகள் கரிசனையுள்ள, அன்புள்ள மகளாக விளங்கினாள் என்று வேதாகமத்தில் மாமியாராகிய நகோமி மற்றும் மருமகளாகிய ரூத்தின் உறவு மிகவும் அழகாக சொல்லப்பட்டுள்ளது. மாமியாராக, மருமகளாக இருக்கின்ற ஒவ்வொருவரும் நகோமி, ரூத்தைப் போல இப்படி ஒரு நல்ல உறவு கொண்டு ஆசீர்வாதமாக வாழ கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வாராக.

தேவன் நம்மையும் ஆசீர்வதிப்பாராக.

**அடிக்குறிப்புகள்**

1. உபாகமம் - 7:3
2. நீதிமொழிகள் - 14:12
3. ரூத் - 1:6
4. நீதிமொழிகள் - 28:13
5. ரூத் - 1:20, 21